கணியூர் பேரூராட்சி அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.

ந.க.எண் : 35/2022 நாள் : 24.03.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–2022

திருப்பூர் மாவட்டம் கணியூர் பேரூராட்சியில் கீழ்காணும் வேலைகளை செய்து கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கணியூர் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 08.04.2022ம் தேதி **வெள்ளிக்கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின்மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 08.04.2022ம் தேதி **வெள்ளிக்கிழமை** பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 07.04.2022ம் தேதி **வியாழக்கிழமை** பிற்பகல் 5.00 மணி வரை அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேற்காணும் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிசட்டம் 1998 மற்றும் அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் மற்றும் அறிவுரைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். ஏனைய விபரங்களை இவ்வலுலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஷெட்யூல் படிவ விலை ரூ. | செலுத்தப் பட வேண்டிய டேவணித் தொகை ரூ. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.7 நடுக்கடை வீதி மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம் அருகில் 60000 லி கொள்ளளவுள்ள மேல்நிலைத்தொட்டி அமைத்தல் | 20,00,000 | 7080 | 40,000 | 6 மாதம் |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி கணியூர் பேரூராட்சி அலுவலகத்தில் உரிய விண்ணப்பத்தின் பேரில் **07.04.2022** பிற்பகல் **5.00** மணி வரை உரிய தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.
2. ஒப்பந்தப்பணிக்கான முன்வைப்பு தொகை பேரூராட்சி அலுவலகத்தில் 08.04.2022 பிற்பகல் 3.00 மணிக்குள் ரொக்கமாக செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்
3. எக்காரணம் கொண்டும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு மேல் ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட மாட்டாது.
4. நிபந்தனைகளின்படி வரபெறாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட கால நேரத்திற்குப்பின் காலம் கடந்து வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.
5. வேலை நடைபெறும் முன்பும், வேலை நடைபெறும் பொழுதும் மற்றும் வேலை முடிவுற்ற பின்பும் மூன்று கட்டங்களில் புகைப்படங்கள் எடுத்து மூனறு பிரதிகள் ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. வேலை நடைபெறும் இடங்களில் திட்டத்தின் பெயர், வேலையின் பெயர், மதிப்பீட்டு தொகை, வேலை உத்திரவு வழங்கப்பட்ட நாள், வேலையை செய்து முடிக்கும் நாள் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் குறித்த அறிவிப்பு பலகை 4 அடி x 2 ½ mo (1.20 m x 0.75 m) அளவில் கண்டிப்பாக நடப்பட வேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவையாகும்.
8. ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவும், நிராகரிக்கவும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.

9. வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற 3 தினங்களுக்குள் ஒவ்வொரு வேலைக்கும் ரூ.20/– மதிப்புள்ள முத்திரைதாளில் சம்பந்தப்பட்ட வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்திகரமாக செய்து முடிக்கப்பட வேண்டும்
10. பணிகள் நடைபெறும் போது குடிநீர் திட்ட பைப்லைன் மற்றும் தொலை தொடர்பு கேபிள்கள் பழுது பட்டால் ஒப்பந்ததாராது சொந்த பொறுப்பில் பழுது நீக்கம் செய்து கொள்ள வேண்டும். இதற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது.
11. கட்டுமான வேலைகளுக்கு தேவைப்படும் தண்ணீரை ஒப்பந்தாரர் செய்து கொள்ள வேண்டும்.
12. உதவிப் செயற்பொறியாளர், அவரது அதிகாரம் பெற்றவரால், செயல் அலுவலரால் அல்லது அரசு உயர் அதிகாரிகள் ஆய்வின் போது தகுதி உள்ள தொழில் நுட்ப உதவியாளர் இல்லாமல் வேலை நடைபெறுவது கண்டறியப்பட்டால் மறு அறிவிப்பு இன்றி ஒப்பந்தாரருக்கு அபராதமாக ரூ.1000/– விதிக்கப்படும்.
13. பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் அல்லது அதிகாரம் பெற்றவரால் அல்லது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் வேலை நடைபெறுவதை கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும், அளவுகள், மேலளவுகள், எடுக்கவும் உரிமையுண்டு.
14. வேலை முடிவுற்றப்பின் சம்பந்தப்பட்ட பொறியாளரால் அளவு, மேலளவு எடுத்து சரிபார்த்து தயாரித்து கொடுக்கப்படும் பட்டியலில் கண்டுள்ள தொகைக்கு உரிய பிடித்தங்கள் செய்து கொண்டு மீதமுள்ள தொகை காசோலை மூலம் நியமன காலக்கெடுவிற்குள் வழங்கப்படும். திட்டப் பணிக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொகை கிடைத்த பின்புதான் தொகை வழங்கப்படும்.
15. பின்வரும் காலங்களில் ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தணிக்கை மறுப்புகளோ, அல்லது உயர் அதிகாரிகளின் கட்டளைப்படியோ தொகை பிடித்தம் செய்ய வேண்டி இருப்பின், ஒப்பந்ததரரால் செலுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இட்டு வைப்புத் தொகைகளிலிருந்து அத்தொகை சரிசெய்து கொள்ளப்படும். வைப்புத் தொகை கணக்கிலுள்ள தொகைக்கு மேல் பிடித்தங்கள் இருப்பின், செயல் அலுவலரால் தெரிவிக்கப்படும் கால அளவிற்குள் ரொக்கமாக பேரூராட்சியில் செலுத்த ஒப்பந்ததாரர்கள் கட்டுப்பட்டவர்கள்.
16. ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்ட பணிகளை உள் ஒப்பந்தத்திற்கு விடக்கூடாது.நிபந்தனைகளுக்குட்படாமலும், உரிய காலக் கெடுவிற்குள் வேலையை முடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு செயல் அலுவலர் தமக்கு தகுதியாய் தோன்றும் தொகையினை அபராதமாக விதித்து வசூலிக்க உரிமையுண்டு.
17. உசிதம் போல் ஒப்பந்தப்புள்ளி தேதியை ஒத்திப்போடவோ அல்லது நிறுத்தி வைக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.
18. பணி முடிக்கப்பட்டவுடன் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவில் சீரமைத்துக்கொடுக்கப்பட வேண்டும்.

24/3/22

செயல் அலுவலர்,
கணியூர் பேரூராட்சி.
திருப்பூர் மாவட்டம்

<u>பெறுதல்</u>

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் அனைவரும்
கணியூர்பேரூராட்சி.

<u>நகல்:</u>

1. திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம், ஈரோடு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) ஈரோடு மண்டலம், ஈரோடு அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. தொகுதி இளம்பொறியாளர், ருத்ராவதி தொகுப்பு.
5. செயல் அலுவலர், மடத்துக்குளம், கொமரலிங்கம், சங்கராமநல்லூர், தளி விளம்பரப்பலகைக்கு ஒட்டி விளம்பரம் செய்ய அனுப்பப்படுகிறது.
6. ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் மடத்துக்குளம், விளம்பரப்பலகைக்கு.
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு,
8. கணியூர் பேரூராட்சி தலைவர் அவர்கள் மேஜைக்கு, தகவலுக்காக.
9. அலுவலக கோப்புக்கு.